

வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் கடலூர் மாவட்டம், திருவந்திபுரம் தேவநாதசுவாமி திருக்கோயில் சாலையில் வண்ண மின்விளக்குகள் அமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கூடுதல் ஆட்சியர் ர.அ.பிரியங்கா உட்பட பலர் உள்ளனர்.



கடலூர் மேற்கு மாவட்டம் திட்டக்குடி சட்டமன்ற தொகுதி மங்களூர் வடக்கு ஒன்றியம் கழக இளம் பேச்சாளர் முல்லைவேந்தன் நிகழ்ச்சி ஏற்பாட்டில் தொண்டங்குறிச்சியில் கலைஞர் நூலகத்தை கடலூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் சி.வி. கணேசன் திறந்து வைத்தார். உடன் மங்களூர் வடக்கு ஒன்றியக் கழக செயலாளர் அடரி. சின்னசாமி மங்களூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் பட்டூர் அமிர்தலிங்கம் தெற்கு ஒன்றிய செயலாளர் பா. செங்குட்டுவன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

# விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் இனமான பேராசிரியர் நினைவு நாள் நிகழ்ச்சி!

செஞ்சி மார்ச் 9-

விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக சார்பில் இனமான பேராசிரியர் அவர்களின் 6ஆம் ஆண்டு நினைவு தினம் அனுசரிக்கப்பட்டது.

இதை முன்னிட்டு செஞ்சி பேருந்து நிலையம் எதிரில்அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த இனமான பேராசிரியரின் திருவுரவப்படத்திற்குசெஞ்சி நகர செயலாளர் கார்த்திக் தலைமையில்விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளரும் ,முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான்எம் எல் ஏ மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

தொடர்ந்துகழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 9 தேதி திருச்சி மாவட்டத்தில் நடைபெறும் கழக நிர்வாகிகள் சந்திப்பு மாநாட்டில் கழக நிர்வாகிகள், பொதுமக்களுக்கு அழைப்பு விடுத்த முதலமைச்சரின் அழைப்பிதழை கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்களிடம் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ வழங்கி மாநாட்டில் கலந்து கொள்ள வேண்டும் என

முதலமைச்சரின் அழைப்பிதழை வழங்கினார்.

நிகழ்ச்சியில்செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், வல்லம் ஒன்றிய பெருந்தலைவர் அமுதா ரவிக்குமார்,செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான்,.மேல் மலையனூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன் ,வல்லம் தெற்கு ஒன்றிய செயலாளர் மொடையூர் துரை,

மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை,நகர பொருளாளர் நெடுஞ்செழியன், பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், சங்கர், பொன்னம்பலம், சிவகுமார்,நூர்ஜகான் ஜாபர் ஒன்றிய அவைத் தலைவர் வாசு, மாவடடபிரதிநிதி அய்யாதுரை, வீடூர் பிரகாஷ்,மாவட்டஅமைப்பு சாரா தொழிலாளர் அணி அமைப்பாளர் தமிழரசன், நிர்வாகிகள்சீனிவாசன், தொண்டரணி பாஷா, சந்திரன், செழியன், நிர்வாகிகள் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# திருச்சி கழக மாநில மாநாட்டில் 500 வாகனங்களில் 10 ஆயிரம் பேர் பங்கேற்பு!

## மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. அறிக்கை!

செஞ்சி மார்ச் 9–

விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக சார்பில் திருச்சி சிறுகனூரில் நடைபெறும் கழக மாநில மாநாட்டில் 500 வாகனங்களில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பங்கேற்க வேண்டும் மெனவிழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ தெரிவித்துள்ளார்.


70 ஆண்டுகளுக்கு முன் அன்பில் அழைக்கிறார் என 1956 ஆம் ஆண்டு திருச்சியில் நடந்த இரண்டாவது மாநில மாநாட்டுக்கழகத் தம்பிகளுக்கு அழைப்பு விடுத்து கடிதம் எழுதினார் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அந்த மாநாட்டு பந்தலில் திரண்டு இருந்த பல்லாயிரக்கணக்கான கழகத் தொண்டர்களிடம் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் போட்டியிடலாமா வேண்டாமா என உட்கட்சி ஜனநாயகத்துடன் வாக்கெடுப்பு நடத்தி பெருவாரியான கழக தொண்டர்கள் தேர்தலில் போட்டியிட வேண்டும் என்று வாக்களித்தன்அடிப்படையில் தீர்மானம் நிறைவேற்றி 1957 இல் முதல் முறையாக தேர்தல் களம் கண்டது நம் லட்சிய இயக்கமாம் திராவிட முன்னேற்ற கழகம். காஞ்சியிலே பேரறிஞர் அண்ணா வெற்றி பெற்று சட்டமன்றம் சென்றார்எழும்பூரில் இனமான பேராசிரியரும், பெரம்பூரில்சத்தியவாணி முத்து அம்மையாரும் எனக்கழகத்தின் சார்பில் முதன் முறையாக 15 பேர் சட்டமன்றத்திற்கும் இரண்டு பேர் நாடாளுமன்றத்திற்கும் சென்றனர்.

எந்தத் திருச்சியிலே நடந்த மாநாட்டில் கழகம் தேர்தல் களம் காண்பதுஎனத் தீர்மானிக்கப்பட்ட தோஅந்த திருச்சி மாவட்டத்தில் அன்று இடம்பெற்று இருந்த குளித்தலை தொகுதியில் வெற்றி வாகை சூடியவர் நம் உயிர் நிகர் தலைவர் கலைஞர் கழக வரலாற்றில் திருச்சி மாநாடு திருப்புமுனை ஆக அமைந்தது.பேரறிஞர் அண்ணா மறைவிற்குப் பிறகு இயக்கத்தையும், ஆட்சியும் தன் தோள்களில் சுமந்த முத்தமிழ் அறிஞர் கலைஞர் 1970 ஆம் ஆண்டு பிப்ரவரி 22 ஆம் நாள் திருச்சியில் நடந்த மாநாட்டில் தான் நம் கொள்கைகளை ஒவ்வொரு தொண்டருக்கும் ஓங்கி ஒலிக்கும் வகையில் ஐம்பெரும் முழக்கங்களை வழங்கினார்.

அண்ணா வழியில் அயராது உழைப்போம் என்பதுதான் முதல் முழக்கம் ,பேரறிஞர் அண்ணாவின் அறவழியில் உழைத்து ஆதிக்கம் அற்ற சமுதாயத்தை அமைத்திடவும் இந்தி திணிப்பை என்றும் எதிர்த்து தாய் தமிழை காத்திடவும் வன்முறையை தவிர்த்து வறுமையை வென்றிடும் வகையில் மாநிலத்தின் சுயாட்சி யாகவும் மத்தியில் கூட்டாட்சியாகவும் கொண்ட உண்மையான வலிமைமிக்க இந்திய ஒன்றியத்தை உருவாக்கிடவும்,உறுதியளிக்கும் வகையில் அந்த ஐம்பெரும் முழக்கங்கள் அமைந்துள்ளன.

நம் கொள்கை பாதையில் மேற்கொள்ளும் லட்சிய பயணத்தில் உயிர்மூச்சாக இருப்பவை நம் உயர்நீகர் தலைவர் திருச்சி மாநாட்டில் வழங்கிய ஐம்பெரும் முழக்கங்களே.அந்த வகையில்

தீரர் கோட்டமாம் திருச்சிக்கு திரண்டுவா உடன்பிறப்பே திராவிட மாடல் 2.0ஆட்சி அமைத்திட உறுதி களம் காண்போம் என்று நம் உயிராய் போற்றி வணங்கும் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்களின் அன்பு கட்டளை ஏற்று திருச்சியில் 9 ஆம்தேதி இன்று மாலை நடைபெறும் கழக மாநில மாநாட்டிற்கு விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள கழக வீரர்கள் அனைவரும் அலைகடன திரண்டு வரும்படி விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ வேண்டுகோள் விடுத்துள்ளார்.



இது குறித்து அவரது அறிக்கையில் கூறுகையில்:

தீரர்கள் கோட்டமாம் திருச்சியில் திமுக கழகத்தின் "ஸ்டாலின் தொடரட்டும் தமிழ்நாடு வெல்லட்டும் என்கிற தேர்தல் சிறப்பு மாபெரும் கழக நிர்வாகிகள் மாநாடு 9ஆம் தேதி இன்று மாலை 4 மணி அளவில் திருச்சி மாவட்டம் சிறுகனூரில் மிக கோலாகலமாக நடைபெற உள்ளது. 10 லட்சம் கழக நிர்வாகிகள் பங்கேற்கும் வகையில் மிகவும் பிரம்மாண்ட முறையில் மாநாடு நடைபெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

தீரர்கள் கோட்டமாம்திருச்சியில் திரள்வோம் திராவிட மாடல் 2.0ஆட்சியை அமைப்போம் திருச்சிக்கு திரண்டு வா உடன்பிறப்பே என்று உள்ள அன்புடன் உடன்பிறப்புகளுக்கு கடிதம் எழுதி மகிழ்ச்சியுடன்அழைத்துள்ளார்தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவர் மு க ஸ்டாலின் அவர்கள்.

இந்திய திருநாடே திரும்பிப் பார்க்கும் வகையில் 10 லட்சம் திமுக தீரர்கள்திரண்டு சரித்திரசாதனை படைத்தனர் என்ற இந்திய அரசியல் வரலாற்றில் இடம் பெறும் வகையில் இந்த மாநாடு திருப்புமுனையாக அமைய உள்ளது.நாம் நாளும் போற்றி வணங்கும் நம்முடைய நெஞ்சம் நிறைந்த அன்புத் தலைவர் கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் அன்பு கட்டளையை ஏற்று விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள செஞ்சி, மயிலம், திண்டிவனம், ஆகிய சட்டமன்றத் தொகுதிகளில் உள்ள மாநில மாவட்ட ஒன்றிய நகர பேரூர் ஊராட்சி கழக நிர்வாகிகள்,அனைத்து அணி பொறுப்பாளர்கள்உள்ளாட்சி பிரதிநிதி கள்பொதுமக்கள்அனைவரும் திரண்டு வந்து இம் மாநாட்டை வெற்றி அடைய செய்ய வேண்டும் என அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

சரித்திர சாதனை படைக்க உள்ள மாபெரும் மாநாட்டில் கலந்து கொள்வது நமது கடமை என்ற அந்த லட்சிய உணர்வோடு விழுப்புரம் வடக்கு மாவட்டத்திலிருந்து 500 வாகனங்களில் 10 ஆயிரத்துக்கு மேற்பட்ட கழக நிர்வாகிகள் கழக தீரர்கள் அனைவரும் 9 ஆம் தேதி இன்று மாலை திருச்சி சிறுகனூர் மாநாட்டு திடலுக்கு அணி அணியா கதிரண்டு வந்து பங்கேற்க வேண்டும் எனதனது அறிக்கையில் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் தெரிவித்துள்ளார்.

# திருச்சியில் தி.மு.க. மாநாட்டில் கூடுவோம்! திருப்பத்தை ஏற்படுத்துவோம்!

## வேலூர் தெற்கு மாவட்டக் கழகத்தினருக்கு மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் அறிக்கை!

வேலூர், மார்ச். 9-

வேலூர் தெற்கு மாவட்ட நிர்வாகிகளுக்கு திருச்சியில் நடைபெற உள்ள கழக நிர்வாகிகள் மாநாட்டில் திரளாக கலந்துக்கொள்ள வேண்டுமென வேலூர் தெற்கு மாவட்ட செயலாளர் ஏ. பி. நந்தகுமார் எம். எல். ஏ அவர்கள் தனது அறிக்கையின் வாயிலாக பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

திராவிட முன்னேற்ற கழகம் துவங்கப்பட்ட நாள் முதல் இன்று வரை பலமுறை மாநில மாநாடு மற்றும் மாவட்ட மாநாடுகளை வெற்றிகரமாக நடத்தி அரசியல் வரலாற்றில் திமுகவுக்கு என தனியானதொரு இடத்தை தக்க வைத்து வந்துள்ளது. அந்த வகையில் 2026 சட்டமன்ற தேர்தலை எதிர்க்கொள்ளும் வகையில் கழகத்தினரிடையே எழுச்சியையும், உத்வேகத்தையும் ஏற்படுத்தி இந்திய ஒன்றியத்தை மதத்தின் அடிப்படையிலும், மொழியின் வேற்றுமையிலும் கபளிகரம் செய்து வரும் பாசிச பாஜக அரசும் அதன் அடிமையாம். எடப்பாடி அதிமுகவும், அமைதி பூங்காவாம் தமிழகத்தை அடிமைப்படுத்த நினைக்கும் அவர்களது எண்ணத்தை முறியடித்து திராவிட மாடல் அரசை கழக தலைவர் தமிழ்நாடு முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையில் இரண்டாவது முறையாக அரியணையில் அமர்த்திட ஒட்டு மொத்த தமிழக மக்களின் ஏகோபித்த பெரும் ஆதரவோடு தேர்தலில் வெற்றி பெற செய்திட உரிய வழிக்காட்டும் நெறிமுறைகளையும், தேர்தல் யுக்திகளையும் கழகத்தினிடையே எடுத்து கூறும் வகையில் தீரர்கள் கோட்டமாம் திருச்சியில் திருப்புமுனை ஏற்படுத்திடும் வகையில் 09.02.2026 திங்கட்கிழமை அன்று கழக தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்கள் தலைமயிலும், கழக இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு துணை முதல்வர் மாண்புமிகு உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சிறப்புரையுடன் கழக நிர்வாகிகள் மாநாடு நடைபெற உள்ளது.



எனவே வேலூர் தெற்கு மாவட்ட திமுகவுக்கு உட்பட்ட மாவட்ட நிர்வாகிகள், சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள், நிர்வாகிகள், தலைமை கழக நிர்வாகிகள், மாநில அணிகளின் துணை செயலாளர்கள், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்ட, வார்டு, ஊர்க்கிளை நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், கழக இந்நாள் முன்னாள் முன்னோடிகள் அனைவரும் திரளாக பங்கேற்று சிறப்பித்திடுமாறு அன்போடு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேற்குறிப்பிட்டவாறு வேலூர் தெற்கு மாவட்ட செயலாளரும் அணைக்கட்டு சட்டமன்ற உறுப்பினருமான ஏ. பி. நந்தகுமார் எம். எல். ஏ அவர்கள், தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# அண்ணா காட்டும் வழியிலே...

தமிழ் நாடென்ற நிலப்பரப்பையும்... இரு மொழிக் கொள்கை என்ற சட்டத்தின் மூலம் "தமிழ் மொழி" என்ற வழிகாட்டியையும் நம்மிடம் தந்துவிட்டுப் போன எங்கள் அண்ணன், தமிழக முதல்வராக பதவி ஏற்ற நாள் இன்று. எங்கள் அண்ணனின் வாழ்க்கையே பாடமாய் அமைந்தது! கடமை, கண்ணியம், கட்டுப்பாடு... அவரது கோட்பாடுகள்! ஆட்சிக்கும் கட்சிக்கும் இடையில் ஒரு கோடு. கட்சிக்கும் குடும்பத்துக்கும் இடையில் ஒரு கோடு. அந்த இருகோடுகளையும் தாண்டுவதற்கு யாருக்கும் அவர் அனுமதி அளித்ததில்லை.

அறிவைப் பரப்பி, அன்பை வளர்த்து, பகுத்தறிவை உணர வைத்து, சமநோக்குப் பார்வையினால் குடும்பப் பாசத்தை உருவாக்கி, விரும்பாதவர்களையும் விரும்பிப் போய்ப் பார்த்து... கழகத்தை ஒரு அரசியல் கட்சியாக மட்டும் நடத்தாமல்... தமிழ் மக்களின் பெரும் குடும்பத்தின் நல்லது கெட்டது என எல்லா நிகழ்வுகளிலும் பங்கேற்கும் ஒரு பாதுகாப்பு இயக்கமாக வளர்த்தெடுத்தவர் அண்ணா. அவர் ஏற்றிய அந்த கொள்கை தீபம்... இன்னமும் ஒளிபரப்பிக் கொண்டுதான் இருக்கிறது! அதனை மறந்துவிட்டு அவர் படத்தை மட்டும் வைத்துக் கொண்டு, பல பிரிவுகள்... இன்றைய நிலைமை புரியாமல் சிதறிக்கிடப்பதும் சீரழிவுக்கு வழி செய்வதும் தவறு.

தமிழ்நாட்டை... அதன் அளப்பரிய வளர்ச்சியையும்... பொறுக்காத ஆன்மீக ஒன்றிய அரசு... ஜனநாயகத்தை கொன்று... தமிழ் மாநிலத்தை சீர்குலைக்க முயல்கிறது. அப்படி நடக்காமல் கழகத்தையும், அண்ணா கண்ட, தமிழ்நாட்டையும் காத்திட முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் போராடுகிறார். இதனை உணர்ந்து நாம் அனைவரும் அண்ணாவின் தம்பிகளாய் கைகோர்த்து ஓரணியில் இணைவோம். ஆரிய திராவிட யுத்தத்தை 2026இல் எதிர்கொள்வோம். திராவிடம் வென்ற பின் நம் கணக்குகளை கூடிப் பேசி தீர்ப்போம்.

அண்ணா நாமம் வாழ்க!

**வி.சி.குகநாதன்**
திரைப்பட இயக்குநர்





வேலூர் தெற்கு மாவட்ட திமுக அலுவலகத்தில் இனமான போரசியர் அவர்களின் 6ம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அவரின் திருவுருவப்படத்திற்கு மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமது சகி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## தமிழ்நாட்டில்

# பிடிஐ நிறுவனத்தின் அடையாளமாகவே மாறிப் போனவர்!

## மூத்த பத்திரிகையாளர் பிடிஐ இராமசாமி மறைவு குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!



சென்னை, மார்ச் 9 –

"தமிழ்நாட்டில் பிடிஐ நிறுவனத்தின் அடையாளமாகவே மாறிப் போனவர் பிடிஐ இராமசாமி" என்று அவரது மறைவு குறித்து முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

மூத்த பத்திரிகையாளர் ராமசாமி அவர்கள் மறைவெய்தியதையொட்டி, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:

பிடிஐ செய்தி நிறுவனத்தின் முன்னாள் தலைமைச் செய்தியாளரும், மூத்த பத்திரிகையாளருமான திரு. ராமசாமி அவர்கள் மறைவெய்திய செய்தியறிந்து மிகவும் வருந்தினேன். அவரது மறைவுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிடிஐ செய்தி நிறுவனத்தின் மூத்த செய்தியாளராகவும் முதன்மைச் செய்தியாளராகவும் 30 ஆண்டுகளுக்கும் மேலாகப் பணியாற்றிய அவர், பிடிஐ இராமசாமி என்றே அழைக்கப்படும் அளவிற்குத் தமிழ்நாட்டில் பிடிஐ நிறுவனத்தின் அடையாளமாகவே மாறிப்போனார். தலைவர் கலைஞர் உள்ளிட்ட தமிழ்நாட்டு முதலமைச்சர்களுடன் நெருக்கமாகப் பழகியவர் அவர். அவரது மறைவு என்பது ஊடகத் துறைக்குப் பேரிழப்பாகும்.

அன்னாரது மறைவால் வாடும் அவரது குடும்பத்தினர், உறவினர்கள், ஊடகத் துறையைச் சேர்ந்த நண்பர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் ஆறுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.



பண்ருட்டி நகராட்சி பின்புறம் பஞ்சவர்ணம் நகரில் அமைக்கப்பட்டுள்ள கட்டிட தொழிலாளர்களுக்கு உழைப்பாளர் நலக் கூடத்தை பண்ருட்டி நகர மன்ற தலைவர் நகரக் கழக செயலாளர் க.இராஜேந்திரன் துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் நகராட்சி ஆணையாளர் காஞ்சனா, சண்முகம், தணிகை செல்வம், சுப்பராயலு, ராமு, ராஜா, ராமலிங்கம், சண்முகவள்ளி பழனி, கிருஷ்ணராஜ், ரமேஷ், முகமது அனிபா, கலைவாணி மதியழகன், பிரபு, ராம்குமார், பன்னீர்செல்வம், பன்னீர்செல்வம், ராஜேந்திரன், மற்றும் பலர் கலந்து கொண்டனர்.